இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்- மட்டம் 3

இறுதிப் பரீட்சை - 2023/2024

LLU 3901 – அரசியலமைப்புச் சட்டம் 1

காலம்: மூன்று மணித்தியாலங்கள்

---

**திகதி: 11th மே 2025** **நேரம்:** 01.30 p.m - 04.30pm

---

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு** (08)

ஏதேனும் ஐந்து(05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "அரசியலமைப்பு நாட்டின் மண்ணில் அடித்தளமிடப்பட்டதாகவும் அல்லது நாட்டின் சொந்த நிலத்திலிருந்தே எழுச்சி பெற்றதாகவும் கூறப்படுவது மூல்நாட்டு மக்கள் தன்மை (Autochthony) என்ற கோட்பாட்டின் விளக்கம் ஆகும்."

R.K.W. Goonesekere and Jayantha Almeida Gunaratne, Constitutional Law Block 1 (The Open University of Sri Lanka, 1984)12.

மேலே கூறப்பட்ட கருத்தை முன்வைத்து, இலங்கை அரசியலமைப்பு 1947 மற்றும் 1972 ஆகிய இரு அரசியலமைப்புகளின் கீழ் மூல்நாட்டு மக்கள் தன்மை. 'Autochthony' என்ற கோட்பாட்டை விளக்குங்கள்.

உங்களுடைய விடையை, இலங்கை அரசியலமைப்பு மற்றும் தொடர்புடைய நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் ஆதாரப்படுத்துங்கள்.

(20 புள்ளிகள்)

2. டுமிந்து, கார்லாந்த் ஜனநாயக சோசலிசக் குடியரசின் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு படிக்கும் 22 வயதுடைய மாணவர் ஆவார். நிலக்க என்ற மூன்றாம் ஆண்டு மாணவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக, நிலக்க கோபமாக இருந்தான். நிலக்காவின் தந்தை கார்லாந்தின் பிரபல அரசியல்வாதி ஆவார். அவன் இந்த தகராரைப் பற்றி தந்தையிடம் கூறியிருந்தான்.

ஒரு நாள், விடுமுறைக்கு பிறகு வீடு திரும்பும் போது, மூன்று போலீசார் டுமிந்துவின் பையை சோதித்து, அதில் போதைப்பொருள் உள்ளதாக கூறி அவரை பயங்கரமாக தாக்கினர். அந்த தாக்குதலின்போது, நலக்கா மற்றும் அவரது தந்தையும் தாக்குதல் நடத்தினர். டுமிந்து கனமான தலைக்கு அடிபட்டதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் நலக்கா மற்றும் அவரது தந்தை கைது செய்யப்படவில்லை.

இந்த சம்பவம் குறித்து டுமிந்துவின் நண்பர் "நியாயமா? அநியாயமா? கார்லாந்தில் சட்ட ஆட்சியை மீளாய்வு செய்வோம்" என்ற தலைப்பில் பத்திரிகைக்காக ஒரு கட்டுரை எழுத விரும்புகிறார். நீங்கள் சட்டப் பட்டதாரி மாணவர் என்பதால், அவர் உங்கள் ஆலோசனையை நாடுகிறார்.

அவருக்குச் சட்ட ஆட்சியின் (Rule of Law) கோட்பாடு மற்றும் அதற்கிணையான சட்டப் பிரிவுகள் குறித்து விளக்குங்கள். கார்லாந்தின் அரசியலமைப்பு இலங்கை 1978 அரசியலமைப்பிற்கு ஒத்ததாக இருப்பதாகக் கருதவும்.

**(20 புள்ளிகள்)**

3. "ஒரு ஜனநாயக அரசில் சட்டமன்ற அதிகாரம் வழங்கப்படும் முறைமைக்கு ஏற்ப, ஜனநாயகக் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளை பாதுகாக்க முடியும்."

மேலே உள்ள கருத்தைப் பொருட்படுத்தி, இலங்கை 1972 மற்றும் 1978 அரசியலமைப்புகளின் கீழ் சட்டவாக்க மீயுயர் தன்மை (Legislative Supremacy) தன்மை குறித்தும் அதன் தாக்கங்கள் குறித்தும் விமர்சனமாக பரிசீலியுங்கள்.

உங்களுடைய விடையை சம்பந்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டவிதிகள், எடுத்துக்காட்டுகள் மற்றும் தீர்ப்புகள் மூலம் ஆதாரப்படுத்துங்கள்.

(20 **புள்ளிகள்**)

4. நொரிகோ ஜனநாயக சோசலிசக் குடியரசின் புதிய நிறைவேற்று ஜனாதிபதியாக திரு.பால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் மேற்கொண்ட சில முடிவுகள் மற்றும் நடவடிக்கைகள் நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

a) தேர்தலுக்கு ஒரு வருடத்துக்குள் பாராளுமன்றத்தை உறுப்பினர்களின் சம்மதமின்றியே திரு.பால் கலைத்தார்.

**(5 புள்ளிகள்)**

b) உடல்நலக் காரணங்களால் திடீரென ராஜினாமா செய்யத் திட்டமிட்டு, தனது ஆலோசகரை அடுத்த ஜனாதிபதியாக நியமித்தார். பாராளுமன்றம் மற்றும் நீதித்துறையினர் இதனை ஏற்க வேண்டும் என தெரிவித்தார்.

**(5 புள்ளிகள்)**

c) தனது பொருளாதாரக் கொள்கைகளை விமர்சித்த பத்திரிகையாளர் ஒருவரை கைது செய்ய உத்தரவு விட்டார். ஜனாதிபதி என்பதால் அவரை வழக்குப் படுத்த முடியாது எனவும் கூறினார்.

**(5 புள்ளிகள்)**

d) பாராளுமன்றத்தில் பெரும்பான்மையின் நம்பிக்கையை பெறாத சாயியை பிரதமராக நியமித்தார்.

**(5 புள்ளிகள்)**

இலங்கை 1978 அரசியலமைப்பிற்கு ஒத்ததாக நொரிகோவின் அரசியலமைப்பு இருக்கின்றது எனக் கருதுகையில், மேற்கூறப்பட்ட ஒவ்வொரு நிலைமையையும் சட்ட ரீதியாக ஆய்வு செய்யவும். தேவையானபட்சத்தில் அரசியலமைப்புச் சட்டவிதிகள் மற்றும் தீர்ப்புகளையும் சுட்டிக்காட்டவும்.

**(மொத்தம் - 20 புள்ளிகள்)**

5. "அரசின் சகல அதிகாரங்களும் ஒரே நபர் அல்லது குழுவின் கையில் மையமாவதென்றால், அது அடக்குமுறைக் காட்சியை உருவாக்கும். எனவே மூன்று அதிகாரங்களும் தனித்தனியாக இருப்பது அவசியம்."

De Smith S.A., *Constitutional and administrative law* (3rd edn, Penguin Books, New York 1981)36.

மேலே உள்ள கருத்தைப் பொருட்படுத்தி, அதிகாரப்பிரிவு (Separation of Powers) என்ற கோட்பாட்டின் வரம்பு மற்றும் செயல்பாடுகள் இலங்கை 1978 அரசியலமைப்பின் கீழ், அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் சட்டமுறையின் கீழ் எவ்வாறு அமைகின்றது என்பதைக் விமர்சனமாக விளக்குங்கள்.

**(20 புள்ளிகள்)**

6. ஹில்வுட்லாந்து ஜனநாயக சோசலிசக் குடியரசில் தேசிய மதவிழாவின் போது ஜனு மற்றும் ஜனத் ஆகியோர் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை. மந்திரி அலுவலகத்தினர் பாதுகாப்பு காரணங்களால் பெரும் கூட்டத்தில் யாரையும் உள்ளே அனுமதிக்க முடியாது எனக் கூறினர்.

ஆனால், அதே அதிகாரிகள் தங்களது உறவினர்களை உள்ளே அனுமதித்தனர். ஜனு மற்றும் ஜனத், தங்களைப் போலவே உள்ளே செல்ல முடியாத அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தி அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யத் திட்டமிடுகின்றனர்.

இவர்கள் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்ய முடியுமா என்பதை உரிய அரசியலமைப்புச் சட்டவிதிகள் மற்றும் தீர்ப்புகளுடன் விளக்குங்கள். (அரசியலமைப்பை இலங்கை 1978 அரசியலமைப்பிற்கு ஒத்ததாகக் கருதவும்).

**(20 புள்ளிகள்)**

7. "நீதித்துறையின் சுதந்திரமே ஒரு நீதியுள்ள சமுதாயத்தின் அமைதியான பலமாகும். சட்ட ஆட்சி நிலவுவதற்கான விழிப்புணர்வான காவலராக நீதித்துறை இருக்கிறது."

மேலே கூறப்பட்ட கருத்துடன் நீங்கள் ஒத்துப்போகிறீர்களா?

இலங்கை 1978 அரசியலமைப்பின் கீழ் நீதித்துறையின் சுதந்திரத்தின் வரம்பு மற்றும் செயல்பாடுகள் குறித்தும் சட்டவிதிகள், தீர்ப்புகள் மற்றும் எடுத்துக்காட்டுகளுடன் விமர்சனமாக பகிருங்கள்.

**(20 புள்ளிகள்)**

8. பின்வரும் தலைப்புகளில் எந்தவொரு நான்கினைப் (04) தேர்வு செய்து சிறுகுறிப்பெழுதுக:

(a) டொனோமோர் அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள்

(b) அரசியலமைப்புவாதம் (Constitutionalism)

(c) விகிதாசார பிரதிநிதித்துவம் (Proportional Representation)

(d) சர்வஜன வாக்கெடுப்பு(Referendum)

(e) ஒம்புட்ஸ்மன் (Ombudsman)

**(5X4=20 புள்ளிகள்)**

****All rights reserved****